மதச்சார்பற்ற முற்போக்குக் கூட்டணி கட்சிகளின் சார்பில், போட்டியிடும் வேட்பாளர்களை ஆதரித்து

# கடலூர் மாவட்டத்திலுள்ள 9 சட்டமன்றத் தொகுதிகளில் முதலமைச்சர், கழகத் தலைவர் தேர்தல் பொதுக்கூட்டத்தில் சிறப்புரை !

## மாவட்டச் செயலாளர் – அமைச்சர் எம்.ஆர்.கே.பன்னீர்செல்வம் அழைப்பு !



தமிழ்நாடு முதலமைச்சர், கழகத் தலைவர் அவர்கள் இன்று (07.04.2026 - செவ்வாய்க்கிழமை) மாலை 04.00 மணியளவில் கடலூர் மஞ்சக்குப்பம் மைதானத்தில் கடலூர் மாவட்டத்திலுள்ள காட்டுமன்னார்கோயில், குறிஞ்சிப்பாடி, புவனகிரி, சிதம்பரம், கடலூர், திட்டக்குடி, விருதாச்சலம், நெய்வேலி, பண்ருட்டி ஆகிய ஒன்பது சட்டமன்றத் தொகுதிகளில் போட்டியிடும் மதச்சார்பற்ற முற்போக்குக் கூட்டணி கட்சிகளின் வெற்றி வேட்பாளர்களை அறிமுகம் செய்து வைத்து, அவர்களை ஆதரித்து நடைபெறும் சட்டமன்றத் தேர்தல் பொதுக்கூட்டத்தில் சிறப்புரையாற்ற உள்ளார்.

அதுசமயம் இக்கூட்டத்தில் கடலூர் மாவட்டத்தைச் சேர்ந்த மதச்சார்பற்ற முற்போக்குக் கூட்டணி கட்சிகளின் மாநில, மாவட்டக் கழக நிர்வாகிகள், மாநகர, ஒன்றிய, நகர, பகுதி, பேரூர், ஊராட்சி மற்றும் கிளை, வார்டு கழக செயலாளர்கள், பிரதிநிதிகள் மற்றும் நிர்வாகிகள், முன்னாள், இந்நாள் சட்டமன்ற, நாடாளுமன்ற உறுப்பினர்கள், தலைமைச் செயற்குழு, பொதுக்குழு உறுப்பினர்கள், தலைமைக் கழக சட்டமன்ற தொகுதி பார்வையாளர்கள், மாவட்ட கழக தொகுதி பார்வையாளர்கள், முன்னாள், இந்நாள் உள்ளாட்சிப் பிரதிநிதிகள், மாநகர மேயர், மண்டல குழு தலைவர்கள், நகராட்சி, பேரூராட்சி மன்ற தலைவர்கள், துணைத் தலைவர்கள் மற்றும் மாநகராட்சி, நகராட்சி, பேரூராட்சி மன்ற உறுப்பினர்கள் மற்றும் முன்னாள் ஊராட்சி ஒன்றியக்குழு தலைவர்கள், ஊராட்சி மன்றத் தலைவர், துணைத் தலைவர்கள், முன்னாள் மாவட்டக்குழு, ஒன்றியக்குழு ஊராட்சி மன்ற உறுப்பினர்கள், மாவட்ட, மாநகர, ஒன்றிய, நகர, பகுதி, பேரூர், வட்டம், வார்டு, பூத் கழக இளைஞரணி மற்றும் மாணவரணி, மகளிரணி, மகளிர் தொண்டரணி, வழக்கறிஞர் அணி, விவசாய அணி, விவசாய தொழிலாளர் அணி, இலக்கிய அணி, கலை இலக்கிய பகுத்தறிவு பேரவை, தொண்டரணி, தொழிலாளர் அணி, மீனவரணி, நெசவாளர் அணி, பொறியாளர் அணி, மருத்துவர் அணி, வர்த்தகர் அணி, ஆதிதிராவிடர் நலக்குழு, சிறுபான்மையினர் நல உரிமைப் பிரிவு, தகவல் தொழில்நுட்ப அணி, சுற்றுச்சூழல் அணி, அயலக அணி, விளையாட்டு மேம்பாட்டு அணி, அமைப்புசாரா ஓட்டுநர் அணி மற்றும் தொழிலாளர் முன்னேற்றச்சங்கம் ஆகிய அணிகளின் நிர்வாகிகள், கழக முன்னோடிகள், வாக்குச்சாவடி நிலைக்குழு முகவர்கள் (BLA2), பூத் கமிட்டி உறுப்பினர்கள் (BLC), பூத் டிஜிட்டல் ஏஜென்ட்கள் (BDA), ஸ்டாலினின் மகளிர் படையினர்கள், கழக தோழர்கள், மதச்சார்பற்ற முற்போக்குக் கூட்டணி கட்சிகளின் நிர்வாகிகள் மற்றும் தோழர்கள், பொதுமக்கள் அனைவரும் பெருந்திரளாக கலந்து கொள்ளுமாறு கேட்டுக்கொள்கிறேன்.

குறிப்பு:- இறையன்பன் குத்தூஸ் அவர்களின் இன்னிசை நிகழ்ச்சி நடைபெறும்.

**அமைச்சர் எம்.ஆர்.கே.பன்னீர்செல்வம்**
செயலாளர், கடலூர் கிழக்கு மாவட்ட தி.மு.க.

---

தமிழ்நாடு சட்டமன்றத் தேர்தல் 2026 - தி.மு.க. கூட்டணி வேட்பாளர்களை ஆதரித்து

# ம.தி.மு.க. பொதுச் செயலாளர் வைகோ தேர்தல் பரப்புரைப் பயணம்!

## (திருத்தப்பட்ட பட்டியல்)



**07.04.2026 செவ்வாய்**
கலிங்கப்பட்டியில் இருந்து புறப்படுதல்
மாலை 4 மணி முதல் இரவு 10 மணி வரை
கோவில்பட்டி – தி.மு.க.
சாத்தூர் – தி.மு.க.
அருப்புக்கோட்டை – தி.மு.க.
திருச்சுழி – தி.மு.க.
(இரவு தங்கல் மதுரை)

**08.04.2026 புதன்**
மாலை 4 மணி முதல் இரவு 10 மணி வரை
மதுரை தெற்கு – ம.தி.மு.க.
(இரவு தங்கல் மதுரை)

**09.04.2026 வியாழன்**
மதுரையில் இருந்து புறப்படுதல்.
மாலை 4 மணி முதல் இரவு 10 மணி வரை
மொடக்குறிச்சி – ம.தி.மு.க.
(இரவு தங்கல் ஈரோடு.)

**10.04.2026 வெள்ளி**
ஈரோட்டில் இருந்து புறப்படுதல்.
மாலை 4 மணி முதல் இரவு 10 மணி வரை
சீர்காழி – ம.தி.மு.க.
(இரவு தங்கல் மயிலாடுதுறை)

**11.04.2026 சனி**
மயிலாடுதுறையில் இருந்து புறப்படுதல்
மாலை 4 மணி முதல் இரவு 10 மணி வரை
திருவிடைமருதூர் – தி.மு.க.
நன்னிலம் – எஸ்.டி.பி.ஐ
நாகபட்டினம் – மனிதநேய மக்கள் கட்சி
(இரவு தங்கல் தஞ்சாவூர்)

**12.04.2026 ஞாயிறு**
தஞ்சாவூரில் இருந்து புறப்படுதல்.
மாலை 4 மணி முதல் இரவு 10 மணி வரை
பாபநாசம் – இந்திய யூனியன் முஸ்லிம் லீக்
கந்தர்வக்கோட்டை – சி.பி.எம்.
திருவெறும்பூர் – தி.மு.க.
திருச்சி மேற்கு – தி.மு.க.
(இரவு தங்கல் திருச்சி)

**13.04.2026 திங்கள்**
மாலை 4 மணி முதல் இரவு 10 மணி வரை
மதுரை வடக்கு – தி.மு.க.
மதுரை தெற்கு – ம.தி.மு.க.
புதுக்கோட்டை – தி.மு.க.
சிவகங்கை – முக்குலத்தோர் புலிப்படை
(இரவு தங்கல் திருச்சி)

**14.04.2026 செவ்வாய்**
திருச்சியில் இருந்து புறப்படுதல்.
மாலை 4 மணி முதல் இரவு 10 மணி வரை
திருச்செங்கோடு – கொங்குநாடு மக்கள் தேசிய கட்சி
மொடக்குறிச்சி – ம.தி.மு.க.
(இரவு தங்கல் ஈரோடு)

**15.04.2026 புதன்**
ஈரோட்டில் இருந்து புறப்படுதல்
மாலை 4 மணி முதல் இரவு 10 மணி வரை
சீர்காழி – ம.தி.மு.க.
(இரவு தங்கல் தஞ்சாவூர்)

**16.04.2026 வியாழன்**
தஞ்சாவூரில் இருந்து புறப்படுதல்.
மாலை 4 மணி முதல் இரவு 10 மணி வரை
புளியங்குடி – தி.மு.க.
சங்கரன்கோவில் – காங்கிரஸ்
திருவேங்கடம் – காங்கிரஸ்
விருதுநகர் பொதுக்கூட்டம் –தே.மு.தி.க.
(இரவு தங்கல் மதுரை)

**17.04.2026 வெள்ளி**
மதுரையில் இருந்து புறப்படுதல்.
மாலை 4 மணி முதல் இரவு 10 மணி வரை
சீர்காழி – ம.தி.மு.க.
(இரவு தங்கல் சீர்காழி)

**18.04.2026 சனி**
சீர்காழியில் இருந்து புறப்படுதல்.
மாலை 4 மணி முதல் இரவு 10 மணி வரை
மொடக்குறிச்சி – ம.தி.மு.க.
(இரவு தங்கல் ஈரோடு)

**19.04.2026 ஞாயிறு**
ஈரோட்டில் இருந்து புறப்படுதல்
மாலை 4 மணி முதல் இரவு 10 மணி வரை
திருநெல்வேலி – தி.மு.க.
பாளையங்கோட்டை – தி.மு.க.
மேலப்பாளையம்
(இரவு தங்கல் கலிங்கப்பட்டி)

**20.04.2026 திங்கள்**
கலிங்கப்பட்டியில் இருந்து புறப்படுதல்.
மாலை 4 மணி முதல் இரவு 10 மணி வரை
கடையநல்லூர் – ம.தி.மு.க.
(இரவு தங்கல் கலிங்கப்பட்டி)

**21.04.2026 செவ்வாய்**
கலிங்கப்பட்டியில் இருந்து புறப்படுதல்.
மதுரை தெற்கு – ம.தி.மு.க.

(பரப்புரை பயணம் நிறைவு)

குறிப்பு :
1. கழகப் பொதுச்செயலாளரின் தேர்தல் பரப்புரை வாகனத்தில் மட்டுமே.
2. மாலை 4 மணி முதல் இரவு 10 மணி வரை மட்டுமே பரப்புரை நிகழ்ச்சி ஏற்பாடு செய்யப்பட வேண்டும்.

பொதுச்செயலாளரின் தேர்தல் பரப்புரை பயண ஒருங்கிணைப்பாளர்
சு.ஜீவன் உயர்நிலைக்குழு உறுப்பினர், அலைபேசி எண் : 81488 98063

**‘தாயகம்’**
சென்னை - 8
நாள்- 06.04.2026


**தலைமைக் கழகம்**
மறுமலர்ச்சி தி.மு.க.

---

முதலமைச்சர் மு.க.ஸ்டாலினின் 5 ஆண்டு கால ஆட்சியில்

# தமிழ்நாடு முழுவதும் பல்வேறு நலத் திட்டங்கள் செயல்படுத்தப்பட்டுள்ளன!

## இராதாபுரம் தொகுதியில் வேட்பு மனு தாக்கல் செய்த மு.அப்பாவு பேட்டி!



நெல்லை.ஏப்.7-

நெல்லை மாவட்டம் இராதாபுரம் சட்டமன்றத் தொகுதி கழக வேட்பாளரும் சட்டப்பேரவை தலைவருமான மு.அப்பாவு அவர்கள் நேற்று (06-04-2026) இராதாபுரம் வட்டாட்சியர் அலுவலகத்தில் தேர்தல் நடத்தும் அலுவலர் ராஜ செல்வியிடம் நெல்லை கிழக்கு மாவட்டப் பொறுப்பாளர் ம.கிரகாம்பெல், காங்கிரஸ் பிரமுகர் சேம்பர் செல்வராஜ், தே.மு.தி.க.விஜி செல்வம், வி.சி.க.அருள் செல்வம் ஆகியோர் முன்னிலையில் வேட்புமனு தாக்கல் செய்தார்.

நெல்லை மாவட்டம் இராதாபுரம் சட்டமன்ற தொகுதி தி.மு.க. வேட்பாளரும் சட்ட பேரவை தலைவருமான மு.அப்பாவு அவர்கள் நேற்று (6 ம் தேதி) மேள தாளம் முழங்க கட்சி தொண்டர்கள், கூட்டணிக்கட்சியினர், பொது மக்கள் என ஆயிரக்கணக்கானோருடன் வந்து தனது வேட்பு மனுவை தாக்கல் செய்தார்.

முன்னதாக அவர் இராதாபுரம் பேருந்து நிலையம் பகுதியில் அமைந்துள்ள முத்தமிழ் அறிஞர் கலைஞரின் பொற்றோர்களான முத்துவேலர், அஞ்சுகத்தம்மாள் ஆகியோரின் சிலைக்கு மாலை அணிவித்து மரியாதை செய்துவிட்டு வேட்பு மனு தாக்கல் செய்ய தொண்டர்கள், கட்சி நிர்வாகிகள், பொது மக்களுடன் இராதாபுரம் தாலுகா அலுவலகத்திற்கு சென்று தேர்தல் அலுவலர் ராஜசெல்வியிடம் தனது வேட்பு மனுவை தாக்கல் செய்தார்.

இதனைத் தொடர்ந்து அவர் செய்தியாளர்களுக்கு அளித்த பேட்டியில்

முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்களின் ஐந்தாண்டு கால ஆட்சியில், தமிழகம் முழுவதும் பல்வேறு நலத்திட்டங்கள் செயல்படுத்தப்பட்டுள்ளது குறிப்பாக, இராதாபுரம் சட்டமன்றத் தொகுதியில் மட்டும் சுமார் 6,000 கோடி ரூபாய் மதிப்பிலான மக்கள் நலத்திட்டங்கள் நிறைவேற்றப் பட்டுள்ளன. கடலில் வீணாகக் கலக்கும் தாமிரபரணி ஆற்றுத் தண்ணீரை, வறண்ட பகுதிகளான நாங்குநேரி, இராதாபுரம், திசையன்விளை, சாத்தான்குளம், உடன்குடி மற்றும் திருச்செந்தூர் பகுதிகளுக்குக் கொண்டு செல்ல 1,060 கோடி ரூபாய் செலவில் நதிநீர் இணைப்பு திட்டம் செயல்படுத்தப் பட்டுள்ளன.

**பெண்களிடையே பெரும் வரவேற்பு!**

நாங்குநேரி மற்றும் இராதாபுரம் தொகுதிகளில் உள்ள சுமார் 1.5 லட்சம் வீடுகளுக்குத் தாமிரபரணி குடிநீர் வழங்கும் வகையில் 1,028 கோடி ரூபாய் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டு, பணிகள் நிறைவடைந்துள்ளன.கலைஞர் மகளிர் உரிமைத் திட்டத்தின் கீழ் தற்போது வழங்கப்பட்டு வரும் 1,000 ரூபாய்,தேர்தல் அறிக்கையின்படி மீண்டும் ஆட்சிக்கு வரும்போது 2,000 ரூபாயாக உயர்த்தப்படும் என்ற அறிவிப்பு பெண்களிடையே பெரும் வரவேற்பைப் பெற்றுள்ளது.வீட்டு உபயோகப் பொருட்கள் (பிரிட்ஜ், வாஷிங் மெஷின்) வாங்க 8,000 ரூபாய் கூப்பன் வழங்கும் திட்டம் மற்றும் 1 முதல் 5-ஆம் வகுப்பு வரை இருந்த காலை சிற்றுண்டி திட்டத்தை 8-ஆம் வகுப்பு வரை விரிவுபடுத்தபடும் போன்ற திட்டங்கள் அனைத்துத் தரப்பு மக்களையும் சென்றடைந்துள்ளது.


இந்த அடுக்கடுக்கான சாதனைகளால் கவரப்பட்ட மக்கள், வரும் தேர்தலில் தன்னை மீண்டும் 30,000 வாக்குகள் வித்தியாசத்தில் வெற்றி பெறச் செய்வோம் என உறுதி பூண்டுள்ளனர். மீண்டும் முதலமைச்சராக மு.க. ஸ்டாலின் அவர்கள் பொறுப்பேற்று, இந்த நலத்திட்டங்கள் தொடர வேண்டும் என்பதே மக்களின் விருப்பமாக உள்ளது என தெரிவித்தார்.

இந்த நிகழ்ச்சியில் நெல்லைகிழக்கு மாவட்டப் பொறுப்பாளர் ம. கிரகாம் பெல், காங்கிரஸ் மூத்த நிர்வாகி சேம்பர் செல்வராஜ், மாவட்ட ஊராட்சி தலைவர் வி.எஸ்.ஆர்.ஜெகதீஷ் வள்ளியூர் வடக்கு ஒன்றிய பொறுப்பாளர் அலெக்ஸ் அப்பாவு மற்றும் கூட்டணிக் கட்சி நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.

---

## திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

### ம.பா. செபாஸ்டின்
### ஏப்ரல் 7 (2010)



1955ஆம் ஆண்டு முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களை நேரில் சந்தித்து, கழகத்தில் இணைத்துக் கொண்டு கழகப் பணியாற்றியவர்.

ஒருங்கிணைந்த சென்னை மாவட்டம், 78வது வட்டச் செயலாளராக தேர்ந்தெடுக்கப்பட்டு தொடர்ந்து முப்பது ஆண்டுகள் அப்பொறுப்பு வகித்தவர்.

டெல்லியில் இலங்கை முன்னாள் அதிபர் ஜெயவர்த்தனேவிற்கு முரசொலி மாறன் அவர்களுடன் கறுப்புக் கொடி காட்டி எதிர்ப்பு தெரிவித்தவர்.

முத்தமிழறிஞர் கலைஞர் மற்றும் இவர் உள்ளிட்ட ஐவர்மீது அ.தி.மு.க. அரசினால் போடப்பட்ட பொய் வழக்கில், நீதிமன்றத்தால் கலைஞர் அவர்களுடன் விடுதலை செய்யப்பட்டவர்.

1955ல் முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களை நேரில் சந்தித்தபோது, அவரிடம் தேதியுடன் பெற்ற கையெழுத்தை ஐம்பதாண்டுகள் பாதுகாத்து வைத்து, 2005ஆம் ஆண்டு, அவரது கையெழுத்தை காட்டியபோது, கலைஞர் அவர்கள் “உன்னைப் போல நீ இருக்காதே!'' என்று எழுதி கையொப்பமிட்டு வாழ்த்தினார்.

இந்தி ஆணை நகல் எரிப்பு போராட்டம் உள்ளிட்ட கழகம் அறிவித்த அனைத்துப் போராட்டங்களில் கலந்து கொண்டு சிறை சென்றவர்.

**தலைமைக் கழகம்**
**தி.மு.க.**

---

## திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

### ஆர். ராஜசேகர்
### ஏப்ரல் 7 (2022)



இளமைப் பருவத்திலேயே கழகக் கொள்கையில் ஈடுபாடு கொண்டு பணியாற்றியவர்.

கிளைக் கழகச் செயலாளர், மதுக்கரை ஒன்றியச் செயலாளர் என கழகத்தில் பல்வேறு பொறுப்புகள் வகித்தவர்.

கழகம் அறிவித்த அனைத்துப் போராட்டங்களிலும் கலந்து கொண்டவர்.

**தலைமைக் கழகம்**
**தி.மு.க.**